தமிழ்நாடு ஆதிதிராவிடர் வீட்டு வசதி மற்றும் மேம்பாட்டுக் கழகம்
தேனாம்பேட்டை, சென்னை – 13.

ஒப்பந்தப்புள்ளி அறிவிப்பு எண் 1 /2017–18/ நாள். 15.05.2017
விழுக்காடு மொத்த ஒப்பந்த முறை

---

தமிழ்நாடு ஆதிதிராவிடர் வீட்டு வசதி மற்றும் மேம்பாட்டுக் கழகம் சார்பில் இணைப்பில் உள்ளவாறு பணியின் எதிரில், குறிப்பிட்ட நாளில் ஒப்பந்தப்புள்ளிகள் சம்மந்தப்பட்ட தாட்கோ கோட்ட செயற்பொறியாளர் அவர்களால் பெற்றுக் கொள்ளப்படும்.

தாட்கோ, தலைமை அலுவலகம் மூலம் ஒப்பந்தக்காரர்களிடமிருந்து பெறப்பட்ட ஒப்பந்தப்புள்ளிகள் அனைத்தும் சென்னையில் உள்ள தாட்கோ தலைமையகத்தில் குறிப்பிட்ட தேதியில் ஒப்பந்தப்புள்ளி ஆய்வுக் குழுவினரால் வந்துள்ள ஒப்பந்தக்காரர்கள் அல்லது அவர்களின் முகவர்கள் முன்னிலையில் 07.06.2017 முற்பகல் 11.00 மணி அளவில் திறக்கப்படும்.

01. அரசாணை எண் 81/ ஆதிமபகுநலத்துறை/ நாள் 10.09.2011 ன்படி தாட்கோ, தமிழக அரசுத் துறைகள் / நிறுவனங்கள்/ மத்திய அரசுத் துறைகள் / நிறுவனங்கள், ஆகியவைகளில் அரசாணை எண்.222/பொதுப்பணித்துறை/ நாள்.08.04.1999 நடைமுறை விதிகளின்படி பதிவு செய்துள்ள கட்டிடப் பணியில் அனுபவமுள்ள, முதல் அழைப்பாக இருந்தால், ஆதிதிராவிடர் மற்றும் பழங்குடியின ஒப்பந்தக்காரர்கள் மட்டும் ஒப்பந்தப்புள்ளி அழைப்பில் கலந்து கொள்ளலாம். மற்ற அழைப்புகளுக்கு அனைத்து ஒப்பந்தக்காரர்களும் ஒப்பந்தப்புள்ளி அழைப்பில் கலந்து கொள்ளலாம். தாட்கோவில் ஒப்பந்தப் பதிவு பெறாதவர்கள் ஒப்பந்த புள்ளியில் கலந்து கொள்வதற்கு முன்பு தாட்கோவில் தகுந்த வகுப்பில் நடப்பாண்டு 2017–18 நிலையில் ஒப்பந்தக்காரராக பதிவு செய்துக் கொள்ள வேண்டும்.

02. ஒப்பந்தப்புள்ளி படிவங்கள் சம்மந்தப்பட்ட கோட்ட செயற் பொறியளர்களிடமிருந்து பணிகளின் பெயருக்கெதிரே குறிப்பிட்டுள்ள தேதிகளில் அலுவலக நேரத்தில் கிடைக்கும். குறிப்பிட்டுள்ள தேதிக்குள் ஒப்பந்தப்புள்ளி படிவம் பெற்றுக் கொள்ள வேண்டியது ஒப்பந்தக்காரர் பொறுப்பாகும். குறிப்பிட்டுள்ள தேதிக்குப்பின் ஒப்பந்தப்புள்ளி படிவம் கோரி வரும் விண்ணப்பம் சம்மந்தப்பட்ட செயற்பொறியாளர்களால் ஏற்றுக் கொள்ளப்பட மாட்டாது.

03. ஒப்பந்தப்புள்ளி படிவங்கள் தபாலில் அனுப்பப்பட மாட்டாது. ஒப்பந்தப்புள்ளி படிவம் பெற நிர்ணயிக்கப்பட்ட விற்பனைக்கும் மற்றும் பெற்றுக் கொள்ள கடைசி நாள் ஏதாவது ஒரு காரணத்தால் அரசு விடுமுறையாக அறிவிக்கப்பட்டால் ஒப்பந்தப்புள்ளி அதற்கு அடுத்த பணி நாளில் விற்பனை செய்து மறுநாள் மாலை 3.00 மணி வரையில் பெற்றுக் கொள்ளப்படும். பூர்த்தி செய்யப்பட்ட மூடி முத்திரையிடப்பட்ட ஒப்பந்தப்புள்ளிகளை சம்மந்தப்பட்ட செயற்பொறியாளர் அலுவலகத்தில் தான் சமர்ப்பிக்கப்பட வேண்டும். மேலும் பதிவு அஞ்சல் மூலமாகவும் மேற்கண்ட அலுவலகத்தில் சமர்ப்பிக்கலாம்.

04. பதிவு அஞ்சல் மூலம் அனுப்பப்படும் ஒப்பந்தப்புள்ளிகள் ஒப்பந்தப்புள்ளி அட்டவணையில் குறிப்பிட்ட காலத்திற்குள் சம்மந்தப்பட்ட அலுவலகத்திற்கு வந்து சேர வேண்டும். காலதாமதத்திற்கு தாட்கோ பொறுப்பேற்காது. குறிப்பிட்ட கால வரையறைக்குள் பெறப்படாத ஒப்பந்தப்புள்ளிகளை ஏற்கப்படாமல் முகவருக்கே திருப்பி அனுப்பப்படும்.

05. ஒப்பந்தப்புள்ளி படிவத்தின் விலை (ஒவ்வொரு பணிக்கும் ரூபாய்) இணைப்பில் உள்ளவாறு ரொக்கமாக, ஒப்பந்தப்புள்ளி கோரும் விண்ணப்பத்துடன் சம்பந்தப்பட்ட செயற்பொறியாளர்கள் ஆவணங்களை சரிபார்த்து ஒப்புதல் அளித்த பின்னரே ஒப்பந்தப்புள்ளி படிவத்திற்கான கட்டணம் சம்மந்தப்பட்ட கோட்ட அலுவலகத்தில் செலுத்தப்பட வேண்டும். இக்கட்டணம் எந்த காரணத்திற்காகவும் எந்தச் சூழ்நிலையிலும் திருப்பித் தரப்பட மாட்டாது.

06. பெறப்பட்ட எல்லா ஒப்பந்தப்புள்ளிகளையோ அல்லது குறிப்பிட்ட ஒப்பந்தப்புள்ளியையோ எவ்வித காரணமும் கூறாமல் இரத்து செய்ய பொது மேலாளர் (தொ.நு.) அவர்களுக்கு முழு அதிகாரமுண்டு.

07. டேவணித் தொகை ரூபாய் இணைப்பில் உள்ளபடி அங்கீகரிக்கப்பட்ட வங்கிகளிடமிருந்து பெறப்பட்டு, குறிப்பிட்டுள்ள சம்மந்தப்பட்ட தாட்கோ செயற் பொறியாளர்கள் மாற்றத் தக்க வகையில் கேட்பு வரைவோலை அல்லது தேசிய சேமிப்புப் பத்திரமாகவோ, அல்லது டெபாசிட்டாகவோ இருத்தல் வேண்டும். டெபாசிட்டாக இருப்பின் (Revenue stamps) முத்திரை வில்லையில் கையொப்பமிட்டு சமர்ப்பிக்கப்படவேண்டும் இத்தொகை செயற் பொறியாளர், தாட்கோ அவர்கள் எடுக்கத் தக்க வகையில் செலுத்தவேண்டும். டேவணித் தொகை குறைவாக செலுத்தப்படும் ஒப்பந்தப்புள்ளிகள் தள்ளுபடி செய்யப்படும். டேவணித் தொகை ரொக்கமாக செலுத்துதல் ஏற்கப்படமாட்டாது. வங்கி கேரண்டி எக்காரணம் கொண்டும் ஏற்றுக் கொள்ளப்பட மாட்டாது. டேவணித் தொகை இல்லாமல் சமர்ப்பிக்கப்படும் ஒப்பந்தப் புள்ளிகள் நிராகரிக்கப்படுவதுடன், ஒப்பந்தக்காரரின் மீது தகுந்த நடவடிக்கை மேற்கொள்ளப்படும்.

08. ஒப்பந்தக்காரர்கள் ஒப்பந்தப்புள்ளி படிவம் கோரும்போது முந்தைய செயல்முறை, செய்து முடித்திருக்கும் வேலையின் தன்மை மற்றும் மதிப்புத் தொகை, ஒப்பந்தக்காரர் பதிவு சான்றிதழ் மற்றும் நடப்பாண்டு பதிவு புதுப்பித்ததற்கான சான்று, மின்பணி செய்வதற்கான ‘பி‘ அல்லது ‘சி‘ உரிமம் பெற்ற நபரின் சான்றிதழ் மற்றும் விற்பனை வரி நிலுவையில்லா சான்று ஆகியவற்றை விண்ணப்பத்துடன் சம்மந்தப்பட்ட செயற்பொறியாளர் அலுவலகத்தில் தான் சமர்ப்பிக்கப்பட வேண்டும். ஒப்பந்தபுள்ளி இணைய தளத்தின் மூலம் இலவசமாக பதிவிறக்கம் (Downloaded from internet)செய்து சமர்ப்பிக்கும்போது மேற்கண்ட ஆவணங்கள் அனைத்தும் இணைத்து அனுப்பப்பட வேண்டும். மேற்படி சான்றிதழ்களை சரி பார்த்த பிறகே ஒப்பந்தப்புள்ளி படிவங்கள் சம்மந்தப்பட்ட செயற் பொறியாளர் அவர்களால் வழங்கப்படும். அரசிதழ் பதிவு பெற்ற அலுவலரால் சான்றொப்பம் பெறப்படாத பதிவுகளுடன் வரும் விண்ணப்பங்கள் நிராகரிக்கப்படும்.

09. மேலும், இவ்வொப்பந்தப்புள்ளி அழைப்பில் கோரப்படும் பணிகள் அனைத்தும் ஒப்பந்தக்காலத்திற்குள் முடிக்கப்பட வேண்டும். தற்போது செய்து வரும் பணிகள் ஏதேனும் இருப்பின் வேலையின் பெயர், ஒப்பந்தத் தொகை, செய்த வேலையின் மதிப்பு ஆகியவற்றினை தவறாது இணைக்க வேண்டும்.

10. ஒப்பந்தப்புள்ளியின் மூடுறையில் (கவரில்) வேலையின் பெயர், டேவணித்தொகை, ஒப்பந்தக்காரரின் பெயர் மற்றும் முகவரி ஆகியவற்றினை தவறாது குறிப்பிட வேண்டும். அவ்வாறில்லாது பெறப்படும் ஒப்பந்தப்புள்ளிகள் திறக்கப்படமாட்டாது. மூடி முத்திரையிடப்படாத ஒப்பந்தப் புள்ளிகள் நிராகரிக்கப்படும்.

11. ஒப்பந்தக்காரர் செய்யும் பணியின் மதிப்பீட்டுத் தொகைக்கு தக்கவாறு தொழில் நுட்ப அலுவலர்களை நியமனம் செய்து அவர்களின் பெயர் கல்வி தகுதியுடன் சான்றிதழ்கள் மற்றும் பணியை மேற்பார்வையிட ஒப்புதல் கடிதம் ஆகியவற்றுடன் மேற்கண்ட விபரங்களை ஒப்பந்தப்படிவத்தில் பூர்த்தி செய்யப்பட வேண்டும்.

12. ஒப்பந்தக்காரர் ஒப்பந்தப்புள்ளி படிவத்தை முழுமையாக படித்து பூர்த்தி செய்து, ஒவ்வொரு பக்கத்திலும் கையெழுத்திட வேண்டும், முழுமையாக பூர்த்தி செய்யப்படாத ஒப்பந்தப்படிவங்கள் நிராகரிக்கப்படும்.

13. ஒப்பந்தப்புள்ளியுடன் இது வரை செய்த பணிகளின் விவரங்கள் பணி தொடங்கிய நாள் பணி முடிவடைந்த நாள் ஆகியவற்றினை பட்டியலிட்டும் மேலும் தற்போது ஏதேனும் பணி செய்யப்படுமாயின் அப்பணியின் பெயர், பணி தொடங்கிய நாள், பணி முடிவடைய வேண்டிய நாள், தற்போதைய நிலை ஆகியன பட்டியலிட்டு இணைக்கப்பட வேண்டும்.

14. ஒப்பந்தக்காரர் ஒப்பந்தப்புள்ளி கோருவதற்கு முன் கட்டுமானத்திற்கு தேவைப்படும் தளவாடப் பொருட்கள் கிடைக்குமிடம் மற்றும் தேவையான அளவு இவற்றினை உறுதி செய்து கொண்டு ஒப்பந்தபுள்ளியில் கலந்து கொள்ள வேண்டும்.

15. ஏற்கனவே பணி ஒப்பந்தம் இரத்து செய்தவர்கள், ஒப்பந்த்புள்ளி நிலையில் இரத்து செய்தவர்களது ஒப்பந்தப்புள்ளிகள் பரிசீலணையில் ஏற்றுக் கொள்ளப்படாது.

16. ஒப்பந்தப்புள்ளி தேதி நிலையில் ஒப்பந்தக்காரர் பதிவு நிலையில் இல்லாதது, பணித்திறன் குறைவாக அல்லது திருப்திகரமாக இல்லாதோர், செயற்பொறியாளர் மந்தன அறிக்கையின்படி பணித்திறன், நிதிதிறன் குறைவானவரது ஒப்பந்தப்புள்ளிகளும் பரிசீலிக்கப்படாது.

17. ஒப்பந்தக்காரர்கள் தங்கள் பதிவின் உத்தரவின்படி எந்த கோட்டத்தில் பதிவு செய்துள்ளார்களோ அந்த கோட்டத்தில் கோரப்படும் ஒப்பந்தப்புள்ளிகளில் மட்டுமே கலந்து கொள்ள வேண்டும்.

<u>இணைப்பு:</u> வேலைகளின் விவர அட்டவணை.

பொது மேலாளர் (தொ.நு)

பொது மேலாளர் (தொ.நு)
தாட்கோ,
சென்னை - 18.

15.5.17

பெறுநர்.
தாட்கோ ஒப்பந்தக்காரர்கள் (பட்டியல்படி.)
(தொடர்புடைய கோட்டங்களின் மூலமாக)
நகல்:

1. மாண்புமிகு ஆதிதிராவிடர் மற்றும் பழங்குடியினர் நலத்துறை அமைச்சர் அவர்களுக்கு தகவலுக்காக சமர்ப்பிக்கப்படுகிறது.
2. தலைவர், தாட்கோ, சென்னை அவர்களுக்கு தகவலுக்காக.
3. அரசு முதன்மைச் செயலாளர், ஆதிதிராவிடர் மற்றும் பழங்குடியினர் நலத் துறை, தலைமைச்செயலகம், சென்னை – 9 அவர்களுக்கு தகவலுக்காக.
4. இயக்குநர், ஆதிதிராவிடர் நலத்துறை, சென்னை – 5 அவர்களுக்கு தகவலுக்காக.
5. இயக்குநர், பழங்குடியினர் நலத் துறை, சென்னை – 5 அவர்களுக்கு தகவலுக்காக.
6. முதன்மை செயலாளர் மற்றும் மேலாண்மை இயக்குநர், தாட்கோ, சென்னை அவர்களுக்கு தகவலுக்காக
7. பொது மேலாளர் (நிர்வாகம்) தாட்கோ, தலைமையகம், சென்னை – 18 அவர்களுக்கு தகவலுக்காக.
8. பொதுமேலாளர் (வளர்ச்சி) தாட்கோ, தலைமையகம், சென்னை – 18 அவர்களுக்கு தகவலுக்காக.
9. நிதிஆலோசகர் (ம) தலைமை கணக்கு அலுவலர், தாட்கோ அவர்களுக்கு தகவலுக்காக.
10. நிறுவனச் செயலர், தாட்கோ, தலைமையகம், சென்னை – 18 அவர்களுக்கு தகவலுக்காக.
11. அனைத்துக் கோட்ட செயற் பொறியாளர்கள்.
12. நகல். அறிவிப்புப் பலகைக்கு

தமிழ்நாடு ஆதிதிராவிடர் வீட்டு வசதி மற்றும் மேம்பாட்டுக் கழகம்

ஒப்பந்தப்புள்ளி அறிவிப்பு எண் 1/ 2017–18 நாள்:15.05.17

விழுக்காடு மொத்த ஒப்பந்த வகை.

தமிழ்நாடு ஆதிதிராவிடர் வீட்டுவசதி மற்றும் மேம்பாட்டுக் கழகத்தின் சார்பில் கீழ்க்காணும் விவரப்படி பணியின் எதிரில் குறிப்பிடப்பட்ட நாளில் மாலை 3.00 மணிவரை மூடி முத்திரையிடப்பட்ட ஒப்பந்தப்புள்ளிகள் சம்மந்தப்பட்ட செயற்பொறியாளரால் பெற்றுக் கொள்ளப்படும். பெறப்பட்ட ஒப்பந்தப்புள்ளிகள் அட்டவணையில் குறிப்பிடப்பட்டுள்ள தேதியில் தாட்கோ தலைமை அலுவலகத்திலுள்ள ஒப்பந்தப்புள்ளி ஆய்வுக் குழுவினரால் முற்பகல் 11.00 மணியளவில் வந்துள்ள ஒப்பந்தக்காரர்கள் (அல்லது) அவர்களது முகவர்களின் முன்னிலையில் திறக்கப்படும். அரசாணை எண் 81/ ஆதிமபகுநலத்துறை/ நாள் 10.09.2011 ன்படி தாட்கோ, தமிழக அரசுத் துறைகள் / நிறுவனங்கள்/ மத்திய அரசுத் துறைகள் / நிறுவனங்கள், ஆகியவைகளில் அரசாணை எண்.222/பொதுப்பணித்துறை/ நாள்.08.04.1999 நடைமுறை விதிகளின்படி பதிவு செய்துள்ள கட்டிடப் பணியில் அனுபவமுள்ள முதல் அழைப்பாக இருந்தால் ஆதிதிராவிடர் மற்றும் பழங்குடியினர் ஒப்பந்தக்காரர்கள் மட்டும் ஒப்பந்தப்புள்ளி அழைப்பில் கலந்துக் கொள்ளலாம், மற்ற அழைப்புகளுக்கு அனைத்து ஒப்பந்தக்காரர்களும் ஒப்பந்தப்புள்ளிஅழைப்பில் கலந்துக் கொள்ளலாம். தாட்கோவில் ஒப்பந்த பதிவு பெறாதவர்கள் ஒப்பந்தப் புள்ளியில் கலந்து கொள்வதற்கு முன் நடப்பாண்டு 2017–18 நிலையில், தாட்கோவில் தகுந்த வகுப்பில் ஒப்பந்தக்காரராக பதிவு செய்து கொள்ளவேண்டும். ஒப்பந்தப்புள்ளி படிவங்கள் சம்மந்தப்பட்ட செயற்பொறியாளர் அலுவலகத்தில் அலுவலக நேரத்தில் உரிய சான்றிதழ்களுடன் ஒப்பந்தப்புள்ளி படிவம் பெறுவதற்கான தொகையினைச்செலுத்தி பெற்றுக் கொள்ளலாம் அல்லது இணைய தளத்தின் மூலம் இலவசமாக பதிவிறக்கம் செய்து கொள்ளலாம்.

"Tender form can be downloaded free of cost from www.tenders.tn.gov.in"

| வ. எண் | வேலைகளின் விவரம் | | பணி விவரம் | வேலை முடிக்க நிர்ணயிக்கப் பட்ட காலம் | முன் வைப்புத் தொகை ரூபாய் | ஒப்பந்தக்காரர் பதிவு வகுப்பு | ஒப்பந்தப்புள்ளி படிவத்தின் விலை மற்றும் விற்பனை வரி |
|---|---|---|---|---|---|---|---|
| | மாவட்டம் | இடம் | | | | | |
| 1 | 2 | 3 | 4 | 5 | 6 | 7 | 8 |
| ஆதிதிராவிடர் நல விடுதிகள் கட்டுதல் (முதல் அழைப்பு) | | | | | | | |
| 1 | சென்னை | இராயபுரம்/ சைதாப்பேட்டை | ஆதிதிராவிடர் நல மாணவியர் விடுதி | 9 மாதங்கள் | 63000 | முதல் வகுப்பு | 15000+750 |
| 2 | திருவள்ளூர் | சோழாவரம் | ஆதிதிராவிடர் நல மாணவர் விடுதி | 9 மாதங்கள் | 61500 | முதல் வகுப்பு | 15000+750 |
| 3 | விழுப்புரம் | மயிலம் | ஆதிதிராவிடர் நல மாணவியர் விடுதி | 9 மாதங்கள் | 61500 | முதல் வகுப்பு | 15000+750 |
| 4 | காஞ்சிபுரம் | காஞ்சிபுரம் | ஆதிதிராவிடர் நல கல்லூரி மாணவர் விடுதி | 9 மாதங்கள் | 61500 | முதல் வகுப்பு | 15000+750 |
| 5 | திருவள்ளூர் | கண்டிகை | ஆதிதிராவிடர் நல மாணவர் விடுதி | 9 மாதங்கள் | 61500 | முதல் வகுப்பு | 15000+750 |
| 6 | மதுரை | அச்சம்பட்டி | ஆதிதிராவிடர் நல மாணவியர் விடுதி | 9 மாதங்கள் | 61500 | முதல் வகுப்பு | 15000+750 |
| 7 | விழுப்புரம் | இளவனசூர் கோட்டை | ஆதிதிராவிடர் நல மாணவியர் விடுதி | 9 மாதங்கள் | 61500 | முதல் வகுப்பு | 15000+750 |
| 8 | தேனி | வருசநாடு | ஆதிதிராவிடர் நல மாணவர் விடுதி | 9 மாதங்கள் | 61500 | முதல் வகுப்பு | 15000+750 |
| 9 | வேலூர் | அரக்கோணம் | ஆதிதிராவிடர் நல மாணவர் விடுதி | 9 மாதங்கள் | 57500 | முதல் வகுப்பு | 15000+750 |

| | | | | | | | |
|---|---|---|---|---|---|---|---|
| 10 | சேலம் | ஆத்தூர் | ஆதிதிராவிடர் நல பள்ளி மாணவர் விடுதி | 9 மாதங்கள் | 57500 | முதல் வகுப்பு | 15000+750 |
| 11 | காஞ்சிபுரம் | பொலப்பாக்கம் | ஆதிதிராவிடர் நல பள்ளி மாணவியர் விடுதி | 9 மாதங்கள் | 57500 | முதல் வகுப்பு | 15000+750 |
| 12 | காஞ்சிபுரம் | பௌஞ்சூர் | ஆதிதிராவிடர் நல பள்ளி மாணவியர் விடுதி | 9 மாதங்கள் | 57500 | முதல் வகுப்பு | 15000+750 |
| ஆதிதிராவிடர் நல பள்ளிகளுக்கு கூடுதல் வகுப்பறை கட்டுமானம் (முதல் அழைப்பு) | | | | | | | |
| 13 | தஞ்சாவூர் | அகரப்பேட்டை | மேல்நிலைப்பள்ளிக்கு 7 வகுப்பறை கட்டிடம் | 6 மாதங்கள் | 42000 | வகுப்பு (2) அதற்கு மேலும் | 15000+750 |
| 14 | நாகப்பட்டினம் | நல்லாடை | ஆரம்பப்பள்ளிக்கு 2 வகுப்பறை கட்டிடம் | 3 மாதங்கள் | 20000 | வகுப்பு (3) அதற்கு மேலும் | 6000+300 |
| 15 | நாகப்பட்டினம் | பாலையூர் | ஆரம்பப்பள்ளிக்கு 2 வகுப்பறை கட்டிடம் | 3 மாதங்கள் | 20000 | வகுப்பு (3) அதற்கு மேலும் | 6000+300 |
| 16 | நாகப்பட்டினம் | திருவிடைக்கழி | ஆரம்பப்பள்ளிக்கு 2 வகுப்பறை கட்டிடம் | 3 மாதங்கள் | 20000 | வகுப்பு (3) அதற்கு மேலும் | 6000+300 |
| 17 | நாகப்பட்டினம் | கொண்டல் | ஆரம்பப்பள்ளிக்கு 2 வகுப்பறை கட்டிடம் | 3 மாதங்கள் | 20000 | வகுப்பு (3) அதற்கு மேலும் | 6000+300 |
| 18 | நாகப்பட்டினம் | அழிஞ்சமங்கலம் | ஆரம்பப்பள்ளிக்கு 2 வகுப்பறை கட்டிடம் | 3 மாதங்கள் | 20000 | வகுப்பு (3) அதற்கு மேலும் | 6000+300 |
| 19 | நாகப்பட்டினம் | வல்லம் | ஆரம்பப்பள்ளிக்கு 2 வகுப்பறை கட்டிடம் | 3 மாதங்கள் | 20000 | வகுப்பு (3) அதற்கு மேலும் | 6000+300 |
| 20 | நாகப்பட்டினம் | வைரவன்காடு | ஆரம்பப்பள்ளிக்கு 2 வகுப்பறை கட்டிடம் | 3 மாதங்கள் | 20000 | வகுப்பு (3) அதற்கு மேலும் | 6000+300 |
| 21 | நாகப்பட்டினம் | மாதானம் | ஆரம்பப்பள்ளிக்கு 2 வகுப்பறை கட்டிடம் | 3 மாதங்கள் | 20000 | வகுப்பு (3) அதற்கு மேலும் | 6000+300 |

| | | | | | | | |
|---|---|---|---|---|---|---|---|
| 22 | நாகப்பட்டினம் | கொண்டல் | மேல்நிலைப்பள்ளிக்கு 2 வகுப்பறை கட்டிடம் | 3 மாதங்கள் | 20000 | வகுப்பு (3) அதற்கு மேலும் | 6000+300 |
| 23 | கடலூர் | ம. மேலவன்னியூர் | மேல்நிலைப்பள்ளிக்கு 4 வகுப்பறை கட்டிடம் | 6 மாதங்கள் | 27000 | வகுப்பு (2) அதற்கு மேலும் | 9000+450 |
| 24 | கடலூர் | தர்மநல்லூர் | மேல்நிலைப்பள்ளிக்கு 12 வகுப்பறை கட்டிடம் | 9 மாதங்கள் | 58500 | முதல் வகுப்பு | 15000+750 |
| 25 | தஞ்சாவூர் | கள்ளப்பெரம்பூர் | ஆரம்பப்பள்ளிக்கு 2 வகுப்பறை கட்டிடம் | 3 மாதங்கள் | 21500 | வகுப்பு (3) அதற்கு மேலும் | 6000+300 |
| 26 | தஞ்சாவூர் | தளிகை | ஆரம்பப்பள்ளிக்கு 2 வகுப்பறை கட்டிடம் | 3 மாதங்கள் | 21500 | வகுப்பு (3) அதற்கு மேலும் | 6000+300 |
| 27 | தஞ்சாவூர் | ஆடுதுறை பெருமாள் கோவில் | ஆரம்பப்பள்ளிக்கு 2 வகுப்பறை கட்டிடம் | 3 மாதங்கள் | 21500 | வகுப்பு (3) அதற்கு மேலும் | 6000+300 |
| 28 | தஞ்சாவூர் | கோனேரிராஜபுரம் | ஆரம்பப்பள்ளிக்கு 2 வகுப்பறை கட்டிடம் | 3 மாதங்கள் | 21500 | வகுப்பு (3) அதற்கு மேலும் | 6000+300 |
| 29 | தஞ்சாவூர் | கல்யாணபுரம் | ஆரம்பப்பள்ளிக்கு 2 வகுப்பறை கட்டிடம் | 3 மாதங்கள் | 21500 | வகுப்பு (3) அதற்கு மேலும் | 6000+300 |
| 30 | தஞ்சாவூர் | அகரப்பேட்டை | ஆரம்பப்பள்ளிக்கு 4 வகுப்பறை கட்டிடம் | 6 மாதங்கள் | 32500 | வகுப்பு (2) அதற்கு மேலும் | 9000+450 |
| 31 | தஞ்சாவூர் | நல்லாடை | மேல்நிலைப்பள்ளிக்கு 2 வகுப்பறை கட்டிடம் | 3 மாதங்கள் | 21500 | வகுப்பு (3) அதற்கு மேலும் | 6000+300 |
| 32 | புதுக்கோட்டை | பழுவினிபட்டி | ஆரம்பப்பள்ளிக்கு 2 வகுப்பறை கட்டிடம் | 3 மாதங்கள் | 21500 | வகுப்பு (3) அதற்கு மேலும் | 6000+300 |
| 33 | புதுக்கோட்டை | முள்ளங்குறிச்சி | ஆரம்பப்பள்ளிக்கு 2 வகுப்பறை கட்டிடம் | 3 மாதங்கள் | 21500 | வகுப்பு (3) அதற்கு மேலும் | 6000+300 |
| 34 | திருவாரூர் | கொல்லபுரம் | ஆரம்பப்பள்ளிக்கு 2 வகுப்பறை கட்டிடம் | 3 மாதங்கள் | 21500 | வகுப்பு (3) அதற்கு மேலும் | 6000+300 |
| 35 | திருவாரூர் | சேறுகுடி | ஆரம்பப்பள்ளிக்கு 2 வகுப்பறை கட்டிடம் | 3 மாதங்கள் | 21500 | வகுப்பு (3) அதற்கு மேலும் | 6000+300 |

| | | | | | | | |
|---|---|---|---|---|---|---|---|
| 36 | திருவாரூர் | சவளக்காரன் | ஆரம்பப்பள்ளிக்கு 2 வகுப்பறை கட்டிடம் | 3 மாதங்கள் | 21500 | வகுப்பு (3) அதற்கு மேலும் | 6000+300 |
| 37 | நாகப்பட்டினம் | கூத்தூர் | ஆரம்பப்பள்ளிக்கு 2 வகுப்பறை கட்டிடம் | 3 மாதங்கள் | 21500 | வகுப்பு (3) அதற்கு மேலும் | 6000+300 |
| 38 | நாகப்பட்டினம் | மனக்குடி | ஆரம்பப்பள்ளிக்கு 2 வகுப்பறை கட்டிடம் | 3 மாதங்கள் | 21500 | வகுப்பு (3) அதற்கு மேலும் | 6000+300 |
| 39 | நாகப்பட்டினம் | நடுதிட்டு | ஆரம்பப்பள்ளிக்கு 2 வகுப்பறை கட்டிடம் | 3 மாதங்கள் | 21500 | வகுப்பு (3) அதற்கு மேலும் | 6000+300 |
| 40 | நாகப்பட்டினம் | சேதூர் | ஆரம்பப்பள்ளிக்கு 2 வகுப்பறை கட்டிடம் | 3 மாதங்கள் | 21500 | வகுப்பு (3) அதற்கு மேலும் | 6000+300 |
| 41 | சேலம் | சிக்கனம்பட்டி | மேல்நிலைப்பள்ளிக்கு 4 வகுப்பறை கட்டிடம் | 6 மாதங்கள் | 32500 | வகுப்பு (2) அதற்கு மேலும் | 9000+450 |
| 42 | சேலம் | ஆத்தூர் | ஆரம்பப்பள்ளிக்கு 2 வகுப்பறை கட்டிடம் | 3 மாதங்கள் | 21500 | வகுப்பு (3) அதற்கு மேலும் | 6000+300 |
| 43 | நாமக்கல் | நவணி | ஆரம்பப்பள்ளிக்கு 3 வகுப்பறை கட்டிடம் | 4 மாதங்கள் | 27000 | வகுப்பு (2) அதற்கு மேலும் | 9000+450 |
| 44 | நாமக்கல் | A.பாலப்பட்டி | ஆரம்பப்பள்ளிக்கு 3 வகுப்பறை கட்டிடம் | 4 மாதங்கள் | 27000 | வகுப்பு (2) அதற்கு மேலும் | 9000+450 |
| 45 | தர்மபுரி | மருதிப்பட்டி | ஆரம்பப்பள்ளிக்கு 2 வகுப்பறை கட்டிடம் | 3 மாதங்கள் | 21500 | வகுப்பு (3) அதற்கு மேலும் | 6000+300 |
| 46 | திருவாரூர் | பேரளம் (பண்டாரவடை) | ஆரம்பப்பள்ளிக்கு 2 வகுப்பறை கட்டிடம் | 3 மாதங்கள் | 21500 | வகுப்பு (3) அதற்கு மேலும் | 6000+300 |
| 47 | வேலூார் | கரிக்கல் | ஆரம்பப்பள்ளிக்கு 2 வகுப்பறை கட்டிடம் | 3 மாதங்கள் | 21500 | வகுப்பு (3) அதற்கு மேலும் | 6000+300 |
| 48 | திருவண்ணாமலை | தென்பள்ளிப்பட்டு | ஆரம்பப்பள்ளிக்கு 2 வகுப்பறை கட்டிடம் | 3 மாதங்கள் | 21500 | வகுப்பு (3) அதற்கு மேலும் | 6000+300 |
| 49 | திருவண்ணாமலை | அருகாவூர் | ஆரம்பப்பள்ளிக்கு 2 வகுப்பறை கட்டிடம் | 3 மாதங்கள் | 21500 | வகுப்பு (3) அதற்கு மேலும் | 6000+300 |
| 50 | விழுப்புரம் | சிங்கனூர் | மேல்நிலைப்பள்ளிக்கு 2 வகுப்பறை கட்டிடம் | 3 மாதங்கள் | 21500 | வகுப்பு (3) அதற்கு மேலும் | 6000+300 |
| 51 | விழுப்புரம் | பந்தமங்கலம் | ஆரம்பப்பள்ளிக்கு 2 வகுப்பறை கட்டிடம் | 3 மாதங்கள் | 21500 | வகுப்பு (3) அதற்கு மேலும் | 6000+300 |

| | | | | | | | |
|---|---|---|---|---|---|---|---|
| 52 | விழுப்புரம் | பள்ளிபுதுப்பட்டு | ஆரம்பப்பள்ளிக்கு 2 வகுப்பறை கட்டிடம் | 3 மாதங்கள் | 21500 | வகுப்பு (3) அதற்கு மேலும் | 6000+300 |
| 53 | விழுப்புரம் | குடியநல்லூர் | ஆரம்பப்பள்ளிக்கு 2 வகுப்பறை கட்டிடம் | 3 மாதங்கள் | 21500 | வகுப்பு (3) அதற்கு மேலும் | 6000+300 |
| 54 | விழுப்புரம் | எடுத்தவைநத்தம் | ஆரம்பப்பள்ளிக்கு 2 வகுப்பறை கட்டிடம் | 3 மாதங்கள் | 21500 | வகுப்பு (3) அதற்கு மேலும் | 6000+300 |
| 55 | கடலூர் | தனம்நகர் | ஆரம்பப்பள்ளிக்கு 3 வகுப்பறை கட்டிடம் | 4 மாதங்கள் | 27000 | வகுப்பு (2) அதற்கு மேலும் | 9000+450 |
| 56 | கடலூர் | இராமாபுரம் | ஆரம்பப்பள்ளிக்கு 2 வகுப்பறை கட்டிடம் | 3 மாதங்கள் | 21500 | வகுப்பு (3) அதற்கு மேலும் | 6000+300 |
| 57 | கடலூர் | A.குச்சிப்பாளையம் | ஆரம்பப்பள்ளிக்கு 2 வகுப்பறை கட்டிடம் | 3 மாதங்கள் | 21500 | வகுப்பு (3) அதற்கு மேலும் | 6000+300 |
| 58 | கடலூர் | L.N.புரம் | ஆரம்பப்பள்ளிக்கு 2 வகுப்பறை கட்டிடம் | 3 மாதங்கள் | 21500 | வகுப்பு (3) அதற்கு மேலும் | 6000+300 |
| 59 | கடலூர் | கணிசப்பாக்கம் | ஆரம்பப்பள்ளிக்கு 2 வகுப்பறை கட்டிடம் | 3 மாதங்கள் | 21500 | வகுப்பு (3) அதற்கு மேலும் | 6000+300 |
| 60 | கடலூர் | இலங்கியனூர் | உயர்நிலைப்பள்ளிக்கு 2 வகுப்பறை கட்டிடம் | 3 மாதங்கள் | 21500 | வகுப்பு (3) அதற்கு மேலும் | 6000+300 |
| 61 | கடலூர் | வளையமாதேவி | ஆரம்பப்பள்ளிக்கு 2 வகுப்பறை கட்டிடம் | 3 மாதங்கள் | 21500 | வகுப்பு (3) அதற்கு மேலும் | 6000+300 |
| 62 | கடலூர் | சிறுமங்கலம் | ஆரம்பப்பள்ளிக்கு 2 வகுப்பறை கட்டிடம் | 3 மாதங்கள் | 21500 | வகுப்பு (3) அதற்கு மேலும் | 6000+300 |
| 63 | கடலூர் | C.ஆலம்பாடி | ஆரம்பப்பள்ளிக்கு 2 வகுப்பறை கட்டிடம் | 3 மாதங்கள் | 21500 | வகுப்பு (3) அதற்கு மேலும் | 6000+300 |
| 64 | கடலூர் | கீழநத்தம் | ஆரம்பப்பள்ளிக்கு 2 வகுப்பறை கட்டிடம் | 3 மாதங்கள் | 21500 | வகுப்பு (3) அதற்கு மேலும் | 6000+300 |
| 65 | கடலூர் | C.சாத்தமங்கலம் | ஆரம்பப்பள்ளிக்கு 2 வகுப்பறை கட்டிடம் | 3 மாதங்கள் | 21500 | வகுப்பு (3) அதற்கு மேலும் | 6000+300 |
| 66 | கடலூர் | குறிஞ்சிப்பாடி | ஆரம்பப்பள்ளிக்கு 2 வகுப்பறை கட்டிடம் | 3 மாதங்கள் | 21500 | வகுப்பு (3) அதற்கு மேலும் | 6000+300 |

| | | | | | | | |
|---|---|---|---|---|---|---|---|
| 67 | திருவள்ளூர் | வடகரை | பெண்கள் மேல்நிலைப்பள்ளிக்கு 6 வகுப்பறை கட்டிடம் | 6 மாதங்கள் | 43500 | வகுப்பு (2) அதற்கு மேலும் | 15000+750 |
| 68 | திருவள்ளூர் | மிட்டனாமல்லி | மேல்நிலைப்பள்ளிக்கு 2 வகுப்பறை கட்டிடம் | 3 மாதங்கள் | 21500 | வகுப்பு (3) அதற்கு மேலும் | 6000+300 |
| 69 | திருவள்ளூர் | பெருமாள்பட்டு | நடுநிலைப்பள்ளிக்கு 1 வகுப்பறை கட்டிடம் | 2 மாதங்கள் | 11500 | வகுப்பு (4) அதற்கு மேலும் | 6000+300 |
| 70 | திருவள்ளூர் | சிறுவடா | ஆரம்பப்பள்ளிக்கு 2 வகுப்பறை கட்டிடம் | 3 மாதங்கள் | 21500 | வகுப்பு (3) அதற்கு மேலும் | 6000+300 |
| 71 | திருவள்ளூர் | காட்டூர் | ஆரம்பப்பள்ளிக்கு 2 வகுப்பறை கட்டிடம் | 3 மாதங்கள் | 21500 | வகுப்பு (3) அதற்கு மேலும் | 6000+300 |
| ஆதிதிராவிடர் நலப்பள்ளிகள் நிலை உயர்த்துதல் (முதல் அழைப்பு) | | | | | | | |
| 72 | வேலூர் | அம்மனூர் | ஆதிதிராவிடர் நல உயர்நிலைப்பள்ளிக்கு 2 வகுப்பறை கட்டிடம், ஆய்வகம் மற்றும் சுற்றுச்சுவர் கட்டும் பணி | 4 மாதங்கள் | 30500 | வகுப்பு (2) அதற்கு மேலும் | 9000 + 450 |
| 73 | வேலூர் | அம்மணாங்குப்பம் | ஆதிதிராவிடர் நல உயர்நிலைப்பள்ளிக்கு 2 வகுப்பறை கட்டிடம், ஆய்வகம் மற்றும் சுற்றுச்சுவர் கட்டும் பணி | 4 மாதங்கள் | 30500 | வகுப்பு (2) அதற்கு மேலும் | 9000 + 450 |
| அரசு பழங்குடியினர் நல உண்டு உறைவிட தொடக்கப்பள்ளி நிலை உயர்த்துதல் (முதல் அழைப்பு) | | | | | | | |
| 74 | திருவண்ணாமலை | அரசவெளி | பழங்குடியினர் நல நடுநிலைப்பள்ளிக்கு வகுப்பறைகள், விடுதிகள், கழிவறை, மற்றும் குளியலறை கட்டடம் | 9 மாதங்கள் | 55000 | முதல் வகுப்பு | 15000+750 |

| | | | | | | | |
|---|---|---|---|---|---|---|---|
| அரசு பழங்குடியினர் உண்டு உறைவிடப் பள்ளிகளுக்கு கூடுதல் வகுப்பறை கட்டுமானம் (முதல் அழைப்பு) | | | | | | | |
| 75 | விழுப்புரம் | மட்டப்பாறை | நடுநிலைப்பள்ளிக்கு 2 வகுப்பறை கட்டிடம் | 3 மாதங்கள் | 21000 | வகுப்பு (3) அதற்கு மேலும் | 6000+300 |
| 76 | விழுப்புரம் | மேல்வாழப்பாடி | நடுநிலைப்பள்ளிக்கு 2 வகுப்பறை கட்டிடம் | 3 மாதங்கள் | 21000 | வகுப்பு (3) அதற்கு மேலும் | 6000+300 |
| 77 | விழுப்புரம் | இன்னாடு | உயர்நிலைப்பள்ளிக்கு 2 வகுப்பறை கட்டிடம் | 3 மாதங்கள் | 21000 | வகுப்பு (3) அதற்கு மேலும் | 6000+300 |
| 78 | விழுப்புரம் | சங்கராபுரம் | நடுநிலைப்பள்ளிக்கு 2 வகுப்பறை கட்டிடம் | 3 மாதங்கள் | 21000 | வகுப்பு (3) அதற்கு மேலும் | 6000+300 |
| 79 | விழுப்புரம் | பரங்கிநத்தம் | நடுநிலைப்பள்ளிக்கு 2 வகுப்பறை கட்டிடம் | 3 மாதங்கள் | 21000 | வகுப்பு (3) அதற்கு மேலும் | 6000+300 |
| 80 | விழுப்புரம் | பாச்சேரி | நடுநிலைப்பள்ளிக்கு 2 வகுப்பறை கட்டிடம் | 3 மாதங்கள் | 21000 | வகுப்பு (3) அதற்கு மேலும் | 6000+300 |
| 81 | விழுப்புரம் | மேல்பாக்கம் | ஆரம்பப்பள்ளிக்கு 2 வகுப்பறை கட்டிடம் | 3 மாதங்கள் | 21000 | வகுப்பு (3) அதற்கு மேலும் | 6000+300 |
| 82 | விழுப்புரம் | வஞ்சிக்குழி | ஆரம்பப்பள்ளிக்கு 2 வகுப்பறை கட்டிடம் | 3 மாதங்கள் | 21000 | வகுப்பு (3) அதற்கு மேலும் | 6000+300 |
| 83 | விழுப்புரம் | கிளாக்காடு | நடுநிலைப்பள்ளிக்கு 2 வகுப்பறை கட்டிடம் | 3 மாதங்கள் | 21000 | வகுப்பு (3) அதற்கு மேலும் | 6000+300 |
| ஆதிதிராவிடர் நல பழைய பள்ளி கட்டடங்களை இடித்து அப்புறப்படுத்திவிட்டு புதிய பள்ளி கட்டுமானம் (முதல் அழைப்பு) | | | | | | | |
| 84 | வேலூர் | இராமநாயினிகுப்பம் | பழைய கட்டடத்ததை இடித்து விட்டு ஆரம்பப்பள்ளிக்கு 4 புதிய வகுப்பறை கட்டிடம் | 4 மாதங்கள் | 21000 | வகுப்பு (3) அதற்கு மேலும் | 6000+300 |
| ஆதிதிராவிடர் நல பள்ளிகளுக்கு கூடுதல் வகுப்பறை கட்டுமானம் (இரண்டாம் அழைப்பு) | | | | | | | |
| 85 | மதுரை | நாச்சிகுளம் | மேல்நிலைப்பள்ளிக்கு 12 வகுப்பறைகள் கட்டடம் | 6 மாதங்கள் | 32000 | வகுப்பு (2)–ம் அதற்கு மேலும் | 9000+450 |

| | | | | | | | |
|---|---|---|---|---|---|---|---|
| பழங்குடியினர் நல விடுதிகளின் பராமரிப்பு மற்றும் பழுது பார்ப்பு பணிகள் (முதல் அழைப்பு) | | | | | | | |
| 86 | சேலம் | மண்ணூர் | பழங்குடியினர் நல மாணவர் விடுதி | 2 மாதங்கள் | 14500 | வகுப்பு (3)–ம் அதற்கு மேலும் | 6000+300 |
| 87 | சேலம் | நெய்யமலை | பழங்குடியினர் நல மாணவர் விடுதி | 2 மாதங்கள் | 20500 | வகுப்பு (3)–ம் அதற்கு மேலும் | 6000+300 |
| 88 | நாமக்கல் | வாழவந்திநாடு | பழங்குடியினர் நல மாணவியர் விடுதி | 2 மாதங்கள் | 12500 | வகுப்பு (4) அதற்கு மேலும் | 6000+300 |
| சாலை மேம்படுத்தும் திட்டம் (முதல் அழைப்பு) | | | | | | | |
| 89 | நாமக்கல் | இராசிபுரம் தாலுக்கா | கப்பத்து முதல் நெய்காதுகுட்டை ஏரி வரையிலான சாலை மேம்படுத்தும் திட்டம் | 2 மாதங்கள் | 14500 | வகுப்பு (4)அதற்கு மேலும் | 6000+300 |
| சமுதாயக்கூடம் கட்டுதல் (முதல் அழைப்பு) | | | | | | | |
| 90 | வேலூர் | கரும்பூர் | சமுதாயக் கூடம் | 3 மாதங்கள் | 18500 | வகுப்பு (3) அதற்கு மேலும் | 6000+300 |

| | | |
|---|---|---|
| முன்வைப்புத்தொகை வரவு வைக்கப்பட வேண்டிய விபரம் | | |
| வ. எண்: 1,2,4,5,11,12,67 முதல் 71 வரை | செயற்பொறியாளர், தாட்கோ, சென்னை | 11 |
| வ. எண்: 9, 47 முதல் 49 வரை, 72 முதல் 74 வரை மற்றும் 90 | செயற்பொறியாளர், தாட்கோ,வேலூர் | 8 |
| வ. எண்: 3,7,23,24,50 முதல் 66 வரை, 75 முதல் 83 வரை | செயற்பொறியாளர், தாட்கோ, விழுப்புரம் | 30 |
| வ. எண்: 10,41 முதல் 45 வரை, 84,86 முதல் 89 வரை | செயற்பொறியாளர், தாட்கோ, சேலம் | 11 |
| வ. எண்: 13 முதல் 22 வரை, 25 முதல் 40 வரை மற்றும் 46 | செயற்பொறியாளர், தாட்கோ, தஞ்சாவூர் | 27 |
| வ. எண்: 6, 8 மற்றும் 85 | செயற்பொறியாளர், தாட்கோ, மதுரை | 3 |
| மொத்தம் | | 90 |

| | | |
|---|---|---|
| ஒப்பந்தப்புள்ளிபடிவம் கிடைக்குமிடங்கள்: சம்மந்தப்பட்ட கோட்ட அலுவலகம் | | |
| ஒப்பந்தப்புள்ளிபடிவத்தின் விற்பனைக் காலம் : | 18.05.2017 முதல் 05.06.2017 வரை | மாலை 5.45 மணி வரை |
| ஒப்பந்தப்புள்ளி சமர்ப்பிக்க கடைசி நாள்: (சம்மந்தப்பட்ட கோட்ட அலுவலகம்) | 06.06.2017 | மாலை 3.00 மணி வரை |
| ஒப்பந்தப்புள்ளிகள் ஒப்பந்தப் புள்ளி ஆய்வுக் குழுவினரால் திறக்கப்படும் நாள் (தாட்கோ தலைமை அலுவலகம்) | 07.06.2017 | முற்பகல் 11.00 மணியளவில் |

பொது மேலாளர் (தொ.நு.)

பொது மேலாளர் (தொ.நு)
தாட்கோ,
சென்னை – 18.

15.5.17

# இணைப்பு – 1

## ஒப்பந்தப்புள்ளி கோரும் அறிக்கை

| ஒப்பந்தப்புள்ளி கோரும் அலுவலர் பெயர், பதவி, முகவரி | | பொறியாளர். க. அழகுபாண்டியன், பி.இ.,<br>பொது மேலாளர் (தொ.நு.) (பொ)<br>தாட்கோ தலைமையகம், 31, செனடாப் ரோடு, 2வது சந்து,<br>தேனாம்பேட்டை, சென்னை – 18 |
|---|---|---|
| வ. எண் | மாவட்டம் | பணிகளின் எண்ணிக்கை |
| 1 | சென்னை | 1 |
| 2 | திருவள்ளூர் | 7 |
| 3 | காஞ்சிபுரம் | 3 |
| 4 | வேலூர் | 6 |
| 5 | திருவண்ணாமலை | 3 |
| 6 | விழுப்புரம் | 16 |
| 7 | கடலூர் | 14 |
| 8 | சேலம் | 5 |
| 9 | நாமக்கல் | 4 |
| 10 | தருமபுரி | 1 |
| 11 | தஞ்சாவூர் | 8 |
| 12 | திருவாரூர் | 4 |
| 13 | நாகப்பட்டினம் | 13 |
| 14 | புதுக்கோட்டை | 2 |
| 15 | மதுரை | 2 |
| 16 | தேனி | 1 |
| | மொத்தம் | 90 |

| | | | |
|---|---|---|---|
| | | பணி அல்லது கொள்முதல் நடைபெறும் மாவட்டங்களின் பெயர்கள். | மேலே விவரப்படி |
| | 1 | எந்த இடத்தில் எந்த தேதிவரை என்ன விலைக்கு ஒப்பந்தப்புள்ளி சம்பந்தமாக படிவம் கிடைக்கும் என்ற விபரம். | சம்மந்தப்பட்ட கோட்டங்களில் 18.05.2017 முதல் 05.06.2017 மாலை 05:45 மணி வரை |
| | 2 | செலுத்தப்பட வேண்டிய முன் வைப்பு தொகை விபரம் | ஒப்பந்தப்புள்ளி அறிவிப்பு படிவத்தில் உள்ளபடி |
| | 3 | நிறைவு செய்யப்பட்ட ஒப்பந்தப் புள்ளிகள் பெறப்படுவதற்கான கடைசி நாளும் நேரமும் மற்றும் இடமும். | 06.06.2017 பிற்பகல் 3.00 மணி வரை சம்மந்தப்பட்ட கோட்டங்கள். |
| | 4 | பெறப்பட்ட ஒப்பந்தப்புள்ளி திறக்கப்படும் இடமும், நாளும் நேரமும் | தாட்கோ தலைமையகம், தேனாம்பேட்டை, சென்னை –18- 07.06.2017 முற்பகல் 11.00 மணி அளவில். |
| | 5 | ஒப்பந்தப்புள்ளி அலுவலர் பொருத்தமானது என தீர்மானிக்கும் முக்கியமானதகவல், | அரசாணை எண் 81/ ஆதிமபகுநலத்துறை/ நாள் 10.09.2011 ன்படி தாட்கோ, தமிழக அரசுத் துறைகள் / நிறுவனங்கள்/ மத்திய அரசுத் துறைகள் / நிறுவனங்கள், ஆகியவைகளில் அரசாணை எண்.222/ பொதுப்பணித்துறை/ நாள். 08.04.1999 நடைமுறை விதிகளின்படி பதிவு செய்துள்ள கட்டிடப் பணியில் அனுபவமுள்ள ஒப்பந்தக்காரர்கள் முதல் அழைப்பாக இருந்தால் ஆதிதிராவிடர் மற்றும் பழங்குடியின ஒப்பந்தக்காரர்கள் மட்டும் ஒப்பந்தப்புள்ளி அழைப்பில் கலந்து கொள்ளலாம், மற்ற அழைப்புகளுக்கு அனைத்து ஒப்பந்தக்காரர்களும் ஒப்பந்தப்புள்ளி அழைப்பில் கலந்து கொள்ளலாம். தாட்கோவில் ஒப்பந்தக்காரர் பதிவு பெறாதவர்கள் ஒப்பந்த புள்ளியில் கலந்து கொள்வதற்கு முன்பு, தாட்கோவில் தகுந்த வகுப்பில் ஒப்பந்தக்காரராக பதிவு செய்து கொள்ளவேண்டும். ஒப்பந்தப்புள்ளிகள் கலந்து கொள்ளும் ஒப்பந்தக்காரரின் பணித்திறன், நிதித்திறன், பதிவு நிலை அடிப்படையில் பரிசீலிக்கப்படும். |

கையொப்பம் :

அலுவலரின் பெயர் : பொறியாளர். க. அழகுபாண்டியன், பி.இ.,

பதவி : பொது மேலாளர் (தொ.நு.)(பொ)

தேதி : 15.05.2017

பொது மேலாளர் (தொ.நு)
தாட்கோ,
சென்னை - 18.

15.5.17